BRAMPTON

Feature Story

டிசம்பர் 11, 2020

# குடியிருப்புவாசிகள் தங்கள் குளிர்கால பயணங்களை பாதுகாப்பாக திட்டமிட நகரத்தின் ப்ளோ ட்ராக்கர் (Plow Tracker) உதவுகிறது

குலிர்காலத்திற்கு தயாராவது என்பது கூட்டு முயற்சியாகும்; மற்றும் ஒவ்வொரு வருடமும் சாலை மற்றும் தெருக்களில் தடையில்லாமல் வழியமைத்துக் கொடுக்க நகரநிர்வாகம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. பனி அகற்றுதல் என வரும்போது, நமது அர்ப்பணிப்பு கொண்ட பொதுப்பணித்துறை, சர்வீஸ் ப்ராம்ப்ட்டன் (Service Brampton) அமைப்பு மற்றும் உப சட்டங்கள் அமலாக்கத்துறை ஆகியவையே நம் மனதில் தோன்றுகின்ற விஷயங்களாக இருக்கலாம்; இருந்தபோதிலும் திரைக்குப் பின்னால் இருந்தபடி ஒன்று சேர்ந்து பணியாற்றுகின்ற பல துறைகளும் உள்ளன ; இவை ப்ராம்ப்ட்டன் நகரில் இருக்கும் அனைவருக்கும் இந்தக் குளிர்காலம் பாதுகாப்பானதாக இருக்க வைக்க தங்கள் பங்களிப்பைச் செய்கின்றனர்.

கடந்த ஆண்டு, நகர நிர்வாகம் தனது ப்ளோ ட்ராக்கரை www.brampton.ca/snow, எனும் வலைப்பக்கத்தில் அறிமுகப்படுத்தியது, இது பொதுப்பணித்துறை, டிஜிட்டல் இன்னொவேஷன் (Digital Innovation) மற்றும் ஐடி (IT)மற்றும் சர்வீஸ் பிராம்ப்டன் (Service Brampton)ஆகியவற்றின் கூட்டுமுயற்சியாகும். எந்தெந்த சாலைகள் மற்றும் நடைபாதைகள் பணிக்குழுக்களால் எந்த நிஜமான நேரத்தில் அகற்றப்பட்டுள்ளன என்பதைப் பார்க்க குடியிருப்பாளர்களுக்கு ப்ளோ டிராக்கர் உதவுகிறது. இந்த ஆண்டின் புதிய விஷயமாக, ப்ளோ டிராக்கரை 311 மொபைல் செயலியிலும் காணலாம், இது கூகிள் பிளே அல்லது ஆப் ஸ்டோரில் கிடைக்கிறது. இந்த கருவியைப் பயன்படுத்தி, குடியிருப்பாளர்கள் பனிப்பொழிவு பராமரிப்பு பற்றிய முன்னேற்றம், எந்த சாலைகளுக்கு முன்னுரிமைகள் கொடுக்கப்படுகிறது எனவும் ஒரு ப்ளோ இயந்திரம் அவர்களுக்கு அருகாமையில் இருக்கிறதா எனவும் சரிபார்க்கலாம்.

“நமது பரந்த குளிர்கால நடவடிக்கைகளை, அணுகக்கூடிய வகையிலும், பயனருக்கு உகந்த வகையிலும் ப்ளோ டிராக்கர் செயலி அளிக்கிறது, ”என்கிறார் நகரத்தின் தலைமை தகவல் அதிகாரி குமணன் கோபாலசாமி. குடியிருப்பாளர்கள் மற்றும் வணிகர்கள் *311* செயலியை பதிவிறக்கி, ப்ளோ டிராக்கர் கருவியை அணுகலாம், மற்றும் வெவ்வேறு செயல்பாடுகளின் நிலையைக் காணலாம், தேவைப்பட்டால் உடனடி நடவடிக்கைக்கான சேவை கோரிக்கையையும் சமர்ப்பிக்கலாம். கடுமையான பனிப்பொழிவுக்குப் பிறகு ஓட்டுனர்கள் தங்களின் அன்றாட பயணங்களை சிறப்பாக திட்டமிட, ஏற்கனவே எந்த சாலைகளில் பனி அகற்றப்பட்டுள்ளது என்பதைச் சரிபார்த்துக் கொள்ளலாம் என்பது ஓட்டுனர்களுக்கு கிடைக்கும் நன்மைகளில் ஒன்றாகும்.”

டிசம்பர் 9 ஆம் தேதி, நகர நிர்வாகமானது தனது பனி அகற்றும் இயந்திரங்களின் அணிவகுப்பு மற்றும் வழிநடத்துவது பற்றிய ஒரு வீடியோவை நகர நிர்வாகம் வழங்கியது; செயல்திறன், ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்பை உள்ளூரில் உந்தி செலுத்துவதற்காகவும் டோரோன்ட்டோ பகுதி நகராட்சிகளில் வரி

செலுத்துவோருடனான தொடர்புகளை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படும் புதுமையான டிஜிட்டல் உத்திகள் மற்றும் வழிமுறைகளை இந்தக் கருத்தரங்கம் ஆராய்ந்தது.

ப்ராம்ப்ட்டன் நன்கு இயங்கிவருகின்ற நகரம் ஆகும்; எங்கள் குடியிருப்பாளர்களுக்கான அன்றாட இயக்க செயல்கள் மற்றும் சேவை வழங்கலை தொடர்ந்து மேம்படுத்த, நாங்கள் அர்ப்பணித்துக் கொண்டுள்ளோம் ”என்கிறார் 9 மற்றும் 10 ஆவது வார்டுகளின் கவுன்சிலரும், 'கார்ப்பரேட் சர்வீசஸ்' க்கான தலைவருமான ஹர்கிரத் சிங். "ப்ளோ டிராக்கர் என்பது உள்ளூர் பனி அகற்றல் நடவடிக்கைகளின் நிலை குறித்து ப்ராம்ப்ட்டன் வாசிகளுக்குத் தெரியப்படுத்துகிறது, மேலும் பனிப்பொழிவு நிகழ்வுகளின் போது தங்கள் பயணங்களை பாதுகாப்பான முறையில் திட்டமிடவும் உதவுகிறது."

ப்ராம்ப்ட்டன் நகர சபையும் மற்றும் அதன் ஊழியர்களும் ஒவ்வொரு குளிர்காலத்திலும் ப்ராம்ப்ட்டன் நகரைப் பாதுகாப்பாக வைத்திருக்க மிகச்சிறந்த, 24 மணி நேர சேவையை வழங்க முயற்சி செய்கிறார்கள்; மேலும் அனைவருக்கும் இந்தக் குளிர்காலபருவத்தை மிகவும் சுவாரஸ்யமானதாக ஆக்குவதற்கான நடவடிக்கைகளை மேம்படுத்த தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

“நகர நிர்வாகத்தில் எங்கள் மிகப்பெரிய நடவடிக்கைகளில் ஒன்றாக இருப்பது குளிர்கால நிலைமைகளைச் சமாளிப்பதேயாகும். நமது குடியிருப்பாளர்களுக்கு இந்த பருவத்தை பாதுகாப்பானதாகவும், சுவாரஸ்யமானதாகவும் மாற்றுவதற்கும், ஆண்டுதோறும் 3,986 லேன் கிலோமீட்டர் சாலைகள், 2,462 பேருந்து நிறுத்தங்கள் மற்றும் 979 கிலோமீட்டர் நடைபாதைகள் / நடைபாதைகள் ஆகியவற்றை பராமரிப்பதற்கும், நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் ”என்று , வார்டுகள் 1 மற்றும் 5 க்கான பிராந்திய கவுன்சிலராகவும் பொது பணிகள் மற்றும் பொறியியல் தலைவராகவும் இருக்கின்ற பால் விசென்ட் அவர்கள் கூறுகிறார். "நமது சமூகத்தை குளிர்காலத்தில் தயார் நிலையில் வைத்திருக்க எல்லோரும் தங்கள் பங்கைச் செய்யும்போது நாம் அனைவரும் நாம் தேவைப்படும் இடத்திற்கு பாதுகாப்பாக செல்ல முடியும் - இதில் குடியிருப்பாளர்களும் அடங்குவர்; அவர்கள் வகையில், பனிப்பொழிவுகளின் போது தங்கள் வாகனங்களை சாலையைவிட்டு தூரமாக வைக்கும்படி நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்; இதனால் அவர்களின் குடியிருப்புப் பகுதியில் இருக்கும் நடைபாதைகள் தடைகள் இல்லாமல் இருக்கும்."

ப்ராம்ப்ட்டன் நகரில் பனிப்பொழிவு பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/snow, மேலும் உங்கள் கைபேசியில் 311 செயலியை Google Play அல்லது App Store இல் இருந்து பதிவிறக்கிக் கொள்ளவும்.

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca